அதிகரிக்கும் ஆன்லைன் மோசடிகள்

செல்போன் மூலம் வலை விரிக்கும் மோசடி கும்பல்

உஷாராக இருக்க போலீசார் அறிவுறுத்தல்

ஆண்டிபட்டி, ஏப். 18: மொபைல் போனுக்கு வரும் மெசேஜ், லிங்க் மற்றும் சமூக வலைத்தளங்களில் வரும் விளம்பரங்கள் மூலம் பல லட்சம் ரூபாய் பணத்தை இழப்பதாக தொடர்ந்து புகார் வருவதால் மாவட்டத்தில் சைபர் கிரைம் வழக்குகள் அதிகரித்து வருகின்றன.வட மாநிலங்களில் இருந்து வங்கி கணக்கில் உள்ள பணத்தை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக புகார் எழுந்துள்ளது. இதனால் செல்போன்களில் வரும் தேவையற்ற இணைப்புகளை திறக்க வேண்டாம் என போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.

இன்றைக்கு அனைத்து பண பரிவர்த்தனைகளும் வங்கி மூலமே நடந்து வருகின்றன. ஆன்லைன் மூலம் வெளிநாடுகளில் வேலைக்கு முயற்சிப்பது, விலையுயர்ந்த செல்போன் மற்றும் பொருட்கள் ஆன்லைன் மூலம் வாங்குவதற்காக புக்கிங் செய்வது, பரிசு பொருட்கள் வந்துள்ளதாக வரும் கால்கள், பணம் இரட்டிப்பாக தருவதாக வரும் விளம்பரங்கள் என பல்வேறு வகைகளில் மக்கள் சமூக வலைத்தளங்களில் தொடர்பிலேயே உள்ளனர். இந்த தொடர்புகளில் உள்ள லிங்க், வாட்ஸ்அப் எண், இ.மெயில் உள்ளிட்டவற்றை குறி வைத்து தொடர்ந்து மோசடிகள் நடந்து வருகின்றன. பணம் இரட்டிப்பாக கிடைக்கச் செய்யும் விளம்பரங்களில் முதலில் அனுப்பும் ரூ.500, ரூ.1000 பணத்திற்கு இரட்டிப்பு தொகை உடனடியாக அனுப்பப்படுகிறது. இதை நம்பி அதிக தொகையை அனுப்பும் நபர்களின் பணம், மோசடி கும்பலால் சுருட்டப்படுகிறது. டெல்லி, உத்தரபிரதேசம், மகராஷ்டிரா, ஜார்கண்ட், பீகார், ஹரியானா உள்ளிட்ட வட மாநிலங்களை சேர்ந்த நபர்களே ஈடுபடுகின்றனர். குறிப்பாக டெல்லியில் இருந்து நைஜிரியா போன்ற நாடுகளை சேர்ந்த கும்பல்களும் இந்திய கும்பல்களுடன் இணைந்து இந்த மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேனி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பாலானோர் சென்னை, திருப்பூர், கோவை உள்ளிட்ட வெளி மாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளிலேயே வேலை பார்த்து வருகின்றனர். இவர்களுக்கான அனைத்து பண பரிவர்த்தனைகளும் வங்கி மூலமே நடந்து வருகிறது. ஆன்லைன் மூலம் வெளி நாடுகளில் வேலைக்கு முயற்சிப்பது, விலையுயர்ந்த செல்போன் மற்றும் பொருட்கள் ஆன் லைன் மூலம் வாங்குவதற்காக புக்கிங் செய்வது, பணம் இரட்டிப்பாக தருவதாக வரும் விளம்பரங்களில் உள்ள லிங்க் உள்ளிட்டவற்றை கிளிக் செய்தவுடன் ஈமெயில் அனுப்பி அதில் உள்ள மெயில் ஐடிக்கு வங்கி கணக்கு எண் விபரம் கேட்பது, அல்லது குறிப்பிட்ட பணத்தை ஆன் லைனில் சம்பந்தப்பட்டவர் வங்கி கணக்கிற்கு செலுத்தச்சொல்லி மெசேஜ் அனுப்புவது, செல்போனில் தொடர்பு கொண்டு பணம் அனுப்ப சொல்வது என பல்வேறு வகைகளில் பணத்தை பெறுகின்றனர். தினமும் ஏதேனும் ஒரு வகையில் சைபர் கிரைம் போலீசாருக்கு புகார் வந்து கொண்டே இருக்கிறது. போலீசில் புகார் அளித்தாலும் பணம் கிடைப்பதில்லை. இவ்வாறு பெண்கள் மற்றும் கூடுதல் பணம் இருப்புள்ள குறிப்பிட்ட கணக்குகளை குறி வைத்தும் மோசடி நடந்து வருகிறது.

இதுகுறித்து போலீசார் கூறுகையில், “ஆன்லைன் மூலம் பொருட்கள் வாங்குவது உள்ளிட்ட அனைத்திலும் விழிப்புடன் இருக்க வேண்டும். மேலும் வங்கி ஏடிஎம் குறித்த விபரங்கள் கேட்டால், அது குறித்து நேரடியாக வங்கிக்கு சென்று தெரியப்படுத்துகிறோம் என போனை துண்டிக்க வேண்டும். மேலும் வங்கியில் இருந்து எந்த விபரமும் கேட்கப்படுவதில்லை என தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகிறது. போனுக்கு வரும் மெசேஜ் மூலம் வரும் தேவையற்ற லிங்க்களை திறக்கக்கூடாது. இது போன்ற மோசடிகளை கண்டறிவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். போனில் வங்கி கணக்கு விபரங்களை கேட்டால் தெரிவிக்க வேண்டாம் என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தற்போது பரிசுப்பொருட்கள் வந்துள்ளன, இரட்டிப்பாக பணம் கிடைக்கும் என்று வேறு வகைகளில் பணத்தை ஆன்லைன் மூலம் சுருட்டும் சம்பவங்கள் நடக்கின்றன. தொழில்நுட்ப வசதி மற்றும் தமிழ்நாடு போலீசாரின் திறனால் பணம் எங்கிருந்து திருடப்பட்டது என்பதை கண்டறிந்தாலும் சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. எந்த மாநிலத்தில் இருந்து நடந்ததோ அந்த மாநில போலீசாரின் உதவி தேவை, சம்பந்தப்பட்ட நபரை கைது செய்வது என்பதில் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. பொதுமக்கள் அனைத்து ஆன்லைன் பணப்பரிவர்த்தனைகளிலும் விழிப்புடன் இருக்க வேண்டும். போனுக்கு வரும் மெசேஜ் மூலம் வரும் தேவையற்ற இணைப்புகளை திறக்கக் கூடாது என்று அறிவுறுத்தி வருகிறோம்” என்றனர்.

மரத்திலிருந்து தவறி விழுந்த வாலிபர் பலி

உத்தமபாளையம், ஏப். 18: உத்தமபாளையம் அருகே உள்ள க.புதுப்பட்டியை சேர்ந்தவர் நாகேஸ்வரன் (40). கூலித்தொழிலாளி. இவர் நேற்று அனுமந்தன்பட்டி அருகே உள்ள புளியந்தோப்பில் பழங்கள் பறிப்பதற்காக ஒரு மரத்தில் ஏறியுள்ளார். அப்போது திடீரென மரத்திலிருந்து அவர் தவறி கீழே விழுந்தார். இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

அரசு அனுமதி இன்றி மண் அள்ளியவர் கைது

வருசநாடு, ஏப். 18: கடமலைக்குண்டு அருகே செங்குளம் கண்மாயில் அரசு அனுமதியின்றி மண் அள்ளப்படுவது தொடர்ந்தது. இதனைத் தொடர்ந்து புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குனர் கிருஷ்ணமோகன் அப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். மண் அள்ளும் இயந்திரம் மூலம் தங்கம்மாள்புரத்தைச் சேர்ந்த முத்துக்குமார் அரசு அனுமதியின்றி அப்பகுதியில் மண் அள்ளிக் கொண்டிருந்தனர். கிருஷ்ணமோகன் கொடுத்த புகாரில் கடமலைக்குண்டு போலீசார் மண் அள்ளும் இயந்திரத்தை பறிமுதல் செய்து முத்துக்குமாரை கைது செய்தனர்.

தனியார் ஊழியரை தாக்கியவர்கள் மீது வழக்கு

தேவதானப்பட்டி, ஏப். 18: தேவதானப்பட்டி அருகே சில்வார்பட்டி கோம்பைப்பிள்ளை தெருவைச் சேர்ந்தவர் அண்ணாமலை மகன் சக்தி(27). இவர் தனியார் நிறுவனத்தில் சேல்ஸ் மேனேஜராக உள்ளார். இந்நிலையில் சக்தி கடந்த 9ம் தேதி தேவதானப்பட்டி- பெரியகுளம் சாலையில் டி.வாடிப்பட்டி பிரிவில் உள்ள தனியார் ஓட்டலுக்கு சாப்பிட வந்துள்ளார். அப்போது டி.வாடிப்பட்டி பிரிவில் மதுபோதையில் நின்று கொண்டிருந்த மூன்று பேர் சக்தியை வழிமறித்து தகராறு செய்து தாக்கியுள்ளனர். இதுகுறித்த புகாரில் தேவதானப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, வர்த்தக பூங்கா, லோஹிகான், புனே - 411014,

கோரிக்கை அறிவிப்பு சர்பாசி சட்டம், 2002 பிரிவு 13(2)-ன் கீழ்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/உப கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் உங்கள் அசையா சொத்து/களை, க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ல் (முன்பு பூனாவால்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் 17 நவம்பர் 2023 முதல் க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என மாற்றப்பட்டது. முன்பு மாக்மா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது மற்றும் முதலில் GE மணி ஹவுசிங் ஃபைனான்ஸ் பொது வரையறுக்கப்படாத நிறுவனமாக இணைக்கப்பட்டது) இனி கடன் வழங்கியவர் என குறிப்பிடப்படும், நீங்கள் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டீர்கள், எனவே, உங்கள் கடன்/கள் செயல்படாத சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) சட்டம் 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ், நிலுவைத் தொகைகளை திரும்பப்பெறுவதற்காக, கடைசியாக அறியப்பட்ட முகவரிகளுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டு, அது வழங்கப்படாமல் திரும்பி வந்துவிட்டது. எனவே, கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 சட்டம் பிரிவு 13(2) அதனுடன் விதி 3(1)-ன் படி, உங்களுக்கு மாற்று சேவையாக இந்த உள்ளடக்கம் வெளியிடப்படுகிறது.
கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், கடனீடுகள், நிலுவைத் தொகைகள் பற்றிய விவரங்கள், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது மற்றும் அதன் கீழ் கோரப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை	கடனீட்டுச் சொத்தின் விவரம்	கோரிக்கை அறிவிப்பு நாள் / நிலுவைத் தொகை ரூ.
12	அசோக் குமார் எஸ், மன்மதமீனா ஏ, கடன் தொகை: ரூ.900000/- கடன் எண்: LAP0494200000005013475	தேனி மாவட்டம், பெரியகுளம் சாலை, கம்பம் சார்பதிவு அலுவலகம், கீழகுடலூர் கிராமம், அங்கூர்பாளையம் பஞ்சாயத்து, பழைய வார்டு எண் 4-ல், தற்போதைய தேர்தல் வார்டு எண் 7-ல், மந்தையம்மன் கோவில் வீதியில், பழைய வீட்டு எண் 43-ல், தற்போதைய வீட்டு எண் 101-ல், சர்வே எண் 1298-ல், உட்பிரிவு பட்டாக் கணக்கில் புதிய பட்டா எண் 1599-ல், புதிய சர்வே எண் 2364/18-இல் மொத்தம் 856.75 சதுர அடி பரப்பளவிலுள்ள இடத்தில் இருந்து 405.61 சதுர அடியை விலக்கி, மீதமுள்ள 451.14 சதுர அடிக்கு விண்ணப்பதாரர் உரிமை பெற்றுள்ளார். அந்த வீட்டு மனைப்பகுதியில் விண்ணப்பதாரர் ஆர்.சி.சி கட்டடத்தை கட்டியுள்ளார். அதில் மின்சாரம் மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்பு உள்ளது. வழித்தட உரிமைகள் மற்றும் அனைத்துவித அமைப்புகளுடன் கூடியது. இந்த நிலத்தின் **எல்லைகள் வருமாறு: கிழக்கு:** கோபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான வீடு, **மேற்கு:** வீதிக்கோட்டை, **வடக்கு:** கருப்பண்ணனுக்குச் சொந்தமான வீடு, **தெற்கு:** கருளிசிங்கத்திற்கு சொந்தமான வீடு	09/04/2025 ரூ. 9,65,965/- (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்தைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்து மட்டும்) தொகை, அதன் மீதான ஆண்டு 16.85% வட்டி வீதத்தில் திருப்பிச் செலுத்தும் நாள் வரை வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டியது.
17	முத்துகுமரன் P, சங்கீதா M கடன் தொகை: ரூ.800000/- கடன் எண்: HF0494H19100071	தேனி மாவட்டம், பெரியகுளம் சாஸ்திரி பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் துணை பதிவுத்துறை, போடிநாயக்கனூர் தாலுகா, பி.மீனாசிபுரம் கிராமத்தில், கரும்தொப்பு பகுதியில், புதிய பட்டா எண் 3557-ல், சர்வே எண் 136/4, தற்போது உட்பிரிவு சர்வே எண் 136/4B-இல், மொத்த பரப்பளவு 0.66.5 ஹெக்டேர் (1 ஏக்கர் 62 சதுர மேற்சதுரம்) மற்றும் புதிய பட்டா எண் 3857-ல், சர்வே எண் 136/3-ல், மொத்த 2 ஏக்கர் 46 சதத்தில் இருந்து வடக்குபுறம் 2 ஏக்கர் 46 சென்ட் அளவில் நிலம் கொண்டது. மேற்கண்ட அனைத்து நிலங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பல்வேறு வீட்டு மனைபகுதிகளாக பிரிக்கப்பட்டு, மதுரை மண்டல மா.வா.(ம) எண் 428/2018ன் அடிப்படையில், மதுரை மண்டலத்துக்குட்பட்ட உள்ளாட்சி திட்டஅணுக்குழு (Local Planning Authority) மூலம், மாஅு.கா. எண் 355/2008 எம்.எம்.3 நாள்: 10.05.2019 ஆம் தேதியன்று ஒப்புதல் பெறப்பட்ட "தங்கபாலம் நகர்" என்ற பெயரில் திட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உள்ள மனைஎண் 37, 1200 சதுர அடி வீட்டு மனைப்பகுதி மற்றும் அதனுடன் சேர்ந்து கட்டமைக்கப்படும் ஆர்.சி.சி வீடுடன் கூடியதாகும். பின்வரும் எல்லைகளுடன் கூடியது: வடக்கு: மனைஎண் 42, கிழக்கு: மனைஎண் 36, மேற்கு: மனைஎண் 38, தெற்கு: கிழக்கு – மேற்கு திசையில் விரிந்த 16 அடி அகலமுள்ள சாலை	09/04/2025 ரூ. 927416/- (ரூபாய் ஒன்பது லட்சத்து இருபத்தேழாயிரத்து நானூறு பதினாறு மட்டும்) கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் வரை ஆண்டுக்கு 15.85%
21	ராமர், ஜோதிராமன் கடன் கணக்கு எண்; HM0126H17100228 எதிராக கடன் தொகை: ரூ.763000/- சேர்த்து கடன் தொகை ரூ.1800000/- மற்றும் கடன் எண்: HL0126H17100062 எதிராக கடன் தொகை ரூ.1037000/-	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைகுண்டு துணை பதிவு அலுவலக எல்லை, மயிலாடும்பாறை கிராமம், வருசநாடு பஞ்சாயத்து, தற்போதைய வார்டு எண் 3, வருசநாடு – தும்மகுண்டு சாலை, கே.எஸ்.பி.நகரில், முந்தைய சர்வே எண் 552/2, மொத்த பரப்பளவு 7 ஏக்கர் 50 சென்ட், உட்பிரிக்கப்பட்டு சர்வே எண் 552/2C என வகைப்படுத்தப்பட்டு, புதிய பட்டா எண் 915-ன் படி, புதிய பரப்பளவு 3.03.5 ஹெக்டேர் அளவிலுள்ளது. இவ்வழியில் தற்போதைய உட்பிரிவு சர்வே எண் 552/2C1A1-இல், மொத்தம் 2.93.0 ஹெக்டேர் நிலம் உள்ளதாகவும், அதில் தெற்குப் பகுதியில் கிழக்கு பக்கம் அமைந்த 2 ஏக்கர் 46 சதம் பரப்பளவில் இருந்து சாலை பகுதி 22 சதம் விலக்கப்பட்டு, மீதமுள்ள 2 ஏக்கர் 24 சதம் நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் மனைஎண் 10 மற்றும் அதில் கட்டப்பட்ட வீடு பின்வரும் எல்லைகளுடன் கூடியதாக உள்ளது: வடக்கு: ஜோதிக்கு சொந்தமான மனைஎண் 9, கிழக்கு: செல்லபாண்டியனுக்கு சொந்தமான மனைஎண் 7, தெற்கு: பாண்டியராஜ் மற்றும் ராஜேந்திரனுக்கு சொந்தமான மனைஎண் 11 மேற்கு: கிழக்கு – மேற்கு திசையில் அமைந்த 15 அடி அகலமுள்ள தெற்கு – வடக்கு பாதை	09/04/2025 கடன் எண்: HM0126H17100228 ரூ. 621312 (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்து ஓராயிரத்து முந்நூற்று பன்னிரண்டு மட்டும்) கூடுதல் வட்டியுடன் சேர்த்து திருப்பிச் செலுத்தும் வரை ஆண்டுக்கு 16.35%. கடன் எண்: HL0126H17100062 ரூ. 915925 (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினைந்தாயிரம் தொள்ளாயிரத்து இருபத்தைந்து மட்டும்) மேலும் வட்டியுடன் ஆண்டுக்கு 18.35% திருப்பிச் செலுத்தும் வரை ஆண்டுக்கு.

கடன்தாரர்/கள் மற்றும் உப கடன்தாரர்/கள் /ஜாமீன்தாரர்களான நீங்கள் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேலே கோரப்பட்டுள்ள தொகையை மேல்வட்டியுடன் முழுமையாக செலுத்துமாறு அழைக்கப்படுகிறீர்கள். தவறினால் கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டு சொத்துகளை, அமலாக்க சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளும் நிர்பந்தத்திற்குள்ளாவார். மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(13) –ன்படி, இதற்கிடையில், மேலே குறிப்பிடப்பட்ட கடனீட்டுச் சொத்துகளை விற்பனை, குத்தகை அல்லது எங்கள் அனுமதியின்றி மாற்றுவதில் இருந்து நீங்கள் தடைசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை தயவுகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 16.04.2025
ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)

விவசாயிகளுக்கு செயல்விளக்கம்

கம்பம் அருகே விவசாயிகளுக்கு விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி.

கம்பம், ஏப். 18: மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு பயிலும் மாணவி சம்யுக்தா கம்பம் வட்டம் உத்தமபுரத்தில் விவசாயிகளுக்கு நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து செயல் விளக்கமளித்தார். ஐ.ஆர் 50, சிஆர் 1009, கோ 46, பட்டாம்பி 2 மற்றும் 18 போன்ற எதிர்ப்புத்திறனுள்ள ரகங்களைப் பயன்படுத்துதல். விளக்குக் கம்பத்தின் அருகில் நாற்றாங்கால் அமைப்பதை தடுத்தல். 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 12.5 கிலோ வேப்பபுண்ணாக்கினை இட வேண்டும். நாற்று நட்ட நாள் முதல், 3 நாட்கள் வரை 2.5 சென்டி மீட்டர் அளவு நீரானது இருக்குமாறு பாதுகாக்க வேண்டும் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

விபத்தில் பலியானவரின் உறவினர்கள் சாலை மறியல்

போடியில் பரபரப்பு

போடி-தேவாரம் தேசிய நெடுஞ்சாலை பஸ் நிறுத்தம் பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் போடி புறநகர் இன்ஸ்பெக்டர் உலகநாதன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

போடி, ஏப். 18: போடி அருகே ராசிங்காபுரத்தை சேர்ந்த இளங்கோவன் (42), பிரபு ஆகிய இருவரும் இயற்கை உபாதைக்கு சென்றனர். மயான பகுதி சாலையோரத்தில் வீட்டிற்கு நடந்து கொண்டிருந்தனர். அப்போது போடியில் இருந்து உத்தமபாளையத்திற்கு சென்ற வேன் இவர்கள் மீது மோதியது.

இதில் இளங்கோவன், பிரபு படுகாயமடைந்தனர். அங்கிருந்தவர்கள் உடனடியாக இருவரையும் மீட்டு போடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த இளங்கோவன் தேனி மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சிறிது நேரம் தீவிர சிகிச்சைக்கு பின்பு அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து போடி தாலுகா போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர். இந்நிலையில், இளங்கோவனின் உறவினர்கள் விபத்து ஏற்படுத்திய நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கோரி போடி-தேவாரம் தேசிய நெடுஞ்சாலை பஸ் நிறுத்தம் பகுதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த போடி புறநகர் இன்ஸ்பெக்டர் உலகநாதன் தலைமையிலான போலீசார்கள் இளங்கோவின் உறவினர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபின் அவர்கள் கலைந்து சென்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோயில், தேவதானப்பட்டி

பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.

பொது ஏலம் / டெண்டர் திறப்பு நாள். 05.05.2025 முற்பகல் 11.30 மணி

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோயிலில் பசலி 1435 மட்டும் (மாசி மகா சிவராத்திரி திருவிழா 10 நாட்கள் நீங்கலாக) கீழ்க்கண்ட விபரப்படியான இனங்கள் நடத்துவதற்குரிய பொது ஏலம்/டெண்டர் திறப்பு நாள்.05.05.2025 முற்பகல் 11.30 மணிக்கு தேனி உதவி ஆணையர் முன்னிலையில் திருக்கோயில் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பெற உள்ளது. பொது ஏலம்/டெண்டர் திறப்பில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ்கண்ட பொதுஏலம் டெண்டர் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் / டெண்டர் கேட்க அனுமதிக்கப்படுவர்.

வ. எண்	இனங்கள் விபரம்	குத்தகை காலம்	ஏலம் டெபாசிட் தொகை ரூ.
1	தேங்காய், பழம், சூடம், நெய் மற்றும் இதர பூஜைக்குத் தேவையான நிவேதானப் பொருட்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.1,00,000/- (வரைவோலையாக மட்டும்)
2	அனுமதிக்கப்பட்ட பேன்ஸி இனங்களான வளையல்கள் பலவகைப்பட்ட சுவாமி படங்கள் குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.1,00,000/- (வரைவோலையாக மட்டும்)
3	பூ, பூமாலைகள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.1,00,000/- (வரைவோலையாக மட்டும்)
4	தேநீர், காபி, இளநீர் மற்றும் குளிர்பானங்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.1,00,000/- (வரைவோலையாக மட்டும்)
5	காது குத்தும் உரிமம்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.50,000/- (வரைவோலையாக மட்டும்)
6	காணிக்கையில் விழும் முடிகளை சேகரித்துக்கொள்ளும் உரிமமாகும்	பசலி-1435க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 வரை) திருவிழா 10 நாட்கள் தவிர	ரூ.1,00,000/- (வரைவோலையாக மட்டும்)

இதர நிபந்தனைகள் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) **என்.வி.தனராஜ்பாண்டியன்,** பரம்பரை நிர்வாக அறங்காவலர்
(ஒம்) **க.வேலுச்சாமி,** எம்.எஸ்சி., செயல் அலுவலர்
(ஒம்) **என்.வி.கனராஜ்பாண்டியன்,** பரம்பரை நிர்வாக அறங்காவலர்

நாள்: 15.04.2025
இடம்: தேவதானப்பட்டி
வெ.ஆ.எண்: 99/25/செ.ம.தொ.அ/தேனி/நாள்: 17.04.2025

ஆண்டிபட்டி ஒன்றிய பகுதிகளில்

அதிமுக பாக முகவர்கள் நியமனம் குறித்து ஆய்வு

ஆண்டிபட்டி, ஏப். 18: அனைத்திந்திய அதிமுக தலைமை அறிவுறுத்தலின்படி, தமிழகம் முழுவதும் வர இருக்கின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கான பணிகள் தொடங்கி நடைபெற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் உள்ள கிளைகளில் பாக முகவர்களை தேர்வு செய்து, நியமனம் செய்யும் பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகிறது.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு பூத் கமிட்டி வாரியாக அதிமுக நிர்வாகிகள் சென்று பதிவு செய்யப்பட்ட பாக முகவர்கள் குறித்த விவரங்களை ஆய்வு செய்தனர். நேற்று ஆண்டிபட்டி ஒன்றியம் டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம் ஆகிய பகுதிகளில் ஒன்றிய செயலாளர்கள் லோகிராஜன், வரதராஜன் ஆகியோர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர், தொகுதி பொறுப்பாளர் ரதிமீனா சேகர், மாநில ஜெ.பேரவை இணைச் செயலாளர் வழக்கறிஞர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நியமன படிவங்களில் உள்ள விவரங்களை ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினர்.

கையக சுவாதீன அறிவிப்பு

ICICI Home Finance
பதிவு அலுவலகம் – ஐசிஐசிஐ பேங்க் டவர்ஸ், பாந்த்ரா – குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு) மும்பை–400051
கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், ஜேபி நகர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை–400059
கிளை அலுவலகம்: 2வது தளம், எண்: 75 டி, லட்சுமி வால்ட்ஸ், பிளாட் – ஏ–8, சாலை சாலை, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி 620018

இப்பவும்,
கீழ்க்கையொப்பமிட்ட நபர், ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்–ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002–ன் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(12) – உடன் படிக்க – கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002–ன் விதி 3–ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தியும், கோரிக்கை அறிவிப்புகளை வழங்கி, இதன் கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்களை அழைத்து, அக்கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையினை அந்த அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்த கோரினார்.
கடன்தாரர் அத்தொகையினை திருப்பிச்செலுத்த தவறியமையால், இதன் மூலம் கடன்தாரர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4) – உடன் படிக்க – மேற்சொன்ன விதிகளின் விதி 8–ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி, இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை, கீழ்க்குறிப்பிட்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்துள்ளார். குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், இச்சொத்துடன் எந்த வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு ஏற்படுத்தப்படும் எந்த வில்லங்கமும் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்– ன் கடன் பொறுப்புக்கு கட்டுப்பட்டது.
சட்டத்தின் 13–வது பிரிவின் துணைப்பிரிவு (8)–ன் விதிகளின்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்காக, உள்ள நேரத்தைப் பொறுத்து, கடன்தாரரின் கவனத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன்தாரர்/ உப-கடன்தாரர் பெயர்/ கடன் கணக்கு எண்	சொத்து விவரம்/சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி/கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	முகமது ஹுசைன் அயூப்கான் (கடன்தாரர்), எம் பெனாசிர்புட்டோ (உப–கடன்தாரர்), முகமது அப்துல்லா ஏ (உப கடன்தாரர்), LHTRI00001338557.	48 பிளாட் எண் 48 பகுதி பகவான் ஸ்ரீ சேஷாத்ரி நகர், பாலகிருஷ்ணா புரம் திண்டுக்கல் திண்டுக்கல் 758/7A திண்டுக்கல்– 624003. எல்லைக்குட்பட்டது– வடக்கு: பூங்கா காலியான இடம், தெற்கு: 48 பிளாட் சதுர அடியில் மேல் பக்கத்தின் 633 1/2 சதுர அடி கொண்ட ஃப்ளாட் 1908 பிளாட் எண் 48, கிழக்கு: சர்வே எண் 759 இல் உள்ள சொத்து, மேற்கு: 20 அடி பின் கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை. சுவாதீன தேதி– 11–ஏப்ரல்–2025	10-01-2023 Rs. 22,65,976/-	திருச்சி
2.	முகமது ஹுசைன் அயூப்கான் (கடன்தாரர்), எம் பெனாசிர்புட்டோ (உப–கடன்தாரர்), முகமது அப்துல்லா ஏ (உப–கடன்தாரர்), LHTRI00001338611.	48 பிளாட் எண் 48 பகுதி பகவான் ஸ்ரீ சேஷாத்ரி நகர், பாலகிருஷ்ணா புரம் திண்டுக்கல் திண்டுக்கல் 758/7A திண்டுக்கல்– 624003. எல்லைக்குட்பட்டது– வடக்கு: பூங்கா காலியான இடம், தெற்கு: 48 பிளாட் சதுர அடியில் மேல் பக்கத்தின் 633 1/2 சதுர அடி கொண்ட ஃப்ளாட் 1908 பிளாட் எண் 48, கிழக்கு: சர்வே எண் 759 இல் உள்ள சொத்து, மேற்கு: 20 அடி பின் கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை. சுவாதீன தேதி– 11–ஏப்ரல்–2025	10-01-2023 Rs. 67,671/-	திருச்சி

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு நிலுவைத்தொகையை திருப்பிச்செலுத்த இதன் மூலம் 30 நாள் கெடு வழங்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் அடமானச்சொத்துகள் இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 30 நாள்கள் முடிவுற்ற பிறகு, கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002–ன் விதிகள் 8 மற்றும் 9–ன் கீழான ஏற்பாடுகளின் படி விற்பனை செய்யப்படும்.

தேதி: ஏப்ரல் 18, 2025, இடம்: திண்டுக்கல்
அதிகாரப்பூர்வ அலுவலர், ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014, 2ஆவது தளம், Dks டவர்ஸ், எண் P/1/45/4, தேனி-கம்பம் பிரதான சாலை, Tneb எதிரில், பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு-625531.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் ஜீ மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(12)–ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.
கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 19/05/2025 அன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com–ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A}	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B}	சுவாதீனத் தன்மை {C}	சொத்தின் விவரம் {D}	நிர்ணய விலை {E}	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F}	முன்வைப்புத் தொகை செலுத்தும் {G}	ஏல உயர்வுத் தொகை {H}	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் {I}	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் {J}	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் {K}
1	கடன் எண். HF0494H20100215 திருப்பதி உடையார் (கடன்தாரர்), கிருஷ்ணவேணி திருப்பதி	அறிவிப்பு தேதி: 08/09/2024, மொத்த நிலுவை: 08/09/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.971210/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்தோராயிரத்து இருநூற்று பத்து மட்டும்) மற்றும் பணம் செலுத்தும் வரையிலான ஆண்டு வட்டி @17% உட்பட.	கையக	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட: Sf எண் 403, கதவு எண் 66/W–2, ராமச்சந்திராபுரம், கண்டமனூர், வல்லநதி கிராமம், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம். மொத்தப் பரப்பளவு 881.88 சதுர அடி, கோவில் அஞ்சல்குறியீடு 625517. எல்லைகள்: கிழக்கு: வேலப்பன் வீடு, மேற்கு: காளிமுத்து தேவர் வீடு, வடக்கு: முத்துசாமி வீடு, தெற்கு: 15 அடிச் சாலை.	ரூ.1447704/– (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று நான்கு மட்டும்)	ரூ.144770.4/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று எழுபது மற்றும் நான்கு பைசா மட்டும்)	30/04/2025 Before 5 PM	10,000/-	28/04/2025 (11AM – 4PM)	19/05/2025 (11 AM- 2PM)	ஒன்றுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண்–68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும்.ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்–000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ 30/04/2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை 2ஆவது தளம், Dks டவர்ஸ், எண் P/1/45/4, தேனி–கம்பம் பிரதான சாலை, Tneb எதிரில், பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு–625531 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com–ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

தேதி: 18.04.2025, இடம்: தேனி
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...
தினகரன் 8904156777
9.30 AM - 6.00 PM

C M Y K